தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**"விவசாயிகளிடம் மட்டுமே நெல் கொள்முதல் செய்ய வேண்டும்'**

First Published : 17 Jun 2011 08:49:45 AM IST

காஞ்சிபுரம், ஜூன் 16: நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் மட்டுமே நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர்ப்புக் கூட்டத்தில் விவசாயிகள் பலர் வலியுறுத்தனர்.

÷காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்ப்புக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

÷இக் கூட்டத்துக்கு, மாவட்ட ஆட்சியர் எஸ்.சிவசண்முகராஜா தலைமை தாங்கினார். வாலாஜாபாத் எம்.எல்.ஏ. கணேசன், செய்யூர் எம்.எல்.ஏ. வி.எஸ்.ராஜி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

÷இக் கூட்டத்தில் பேசி விவசாயிகள் பலர் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தனியார் வியாபாரிகளிடம் நெல் கொள்முதல் செய்யக் கூடாது. விவசாயிகளிடம் மட்டுமே நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி பேசினர்.

÷செய்யூர் எம்.எல்.ஏ. வி.எஸ்.ராஜி: செய்யூர் பகுதியில் கூடுதல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும். விவசாயிகளுக்கு உரம், மருந்துகள் போன்றவை முறையாக மானிய விலையில் கிடைப்பதில்லை.

÷விவசாயத் துறையினர் இதில் கவனம் செலுத்தி விவசாயிகளுக்கு மானிய விலையில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

÷கே.நேரு (மார்க்சிஸ்ட்-காஞ்சிபுரம்): நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் உடனடியாக நெல் கொள்முதல் செய்ய வேண்டும்.

÷பாலாற்றில் மணல் கொள்ளையை தடுத்து நிறுத்த வேண்டும். உத்தரமேரூர் அருகே தென்னலூரில் தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தை அரசு மீட்க வேண்டும் என்றார்.

÷திருவேங்கடம் (திருப்புலிவனம்): நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை உடனடியாக கொள்முதல் செய்ய வேண்டும்.

÷பாஸ்கரன் (பழவேரி): தனியார் சிலர் 90 கிலோ எடை கொண்ட நெல் மூட்டையை ரூ.580-க்கு விற்பனைக்கு செய்கின்றனர். ஆனால் மத்திய அரசு ரூ.1150 என்று நிர்ணயித்துள்ளது. தனியார் அதே விலைக்கு வாங்க வலியுறுத்த வேண்டும் என்றார்.

÷மதுராந்தகம் மணி: படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு நிதி குறைவாக ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது பொறுப்பேற்றுள்ள அதிமுக அரசு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்றார்.

÷சீனுவாசன் (அவளூர்): பாலாற்றில் சில தனியார் தொழில் நிறுவனங்களிள் அமிலம் கலந்த கழிவுநீரை வெளிவிடுகின்றனர். இதனால் அப் பகுதியில் நிலத்தடி நீர் பாதிக்கப்படுகிறது. இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

÷மேலும் இக் கூட்டத்தில் பல்வேறு விவசாயிகள் பாலாற்றில் தடுப்பணை கட்ட வேண்டும். மணல் கொள்ளையை தடுத்து நிறுத்த வேண்டும், ஏரி, குளங்களை தூர்வார வேண்டும்.

÷மின்சாரம் முறையாக கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பலர் பேசினர்.

÷இக் கூட்டத்தில் பேசிய மாவட்ட ஆட்சியர் எஸ்.சிவசண்முகராஜா பேசும்போது, "இதுதான் நான் பொறுப்பேற்று முதல் கூட்டம். உங்கள் கோரிக்கை தொடர்பாக பல்வேறு துறைகளை அதிகாரிகளுடன் கலந்து பேசி முடிவெடுக்கப்படும்' என்றார்.

**மானாவாரி சாகுபடியில் அதிக மகசூல் பெற..**

First Published : 16 Jun 2011 10:35:01 AM IST

குடியாத்தம்: மணிலா, உளுந்து உள்ளிட்ட மானாவாரி பயிர் சாகுபடியில் மகசூலை அதிகரிக்க வேளாண்மைத் துறையினர் யோசனை தெரிவித்துள்ளனர்.

தற்போது விவசாயிகள் பரவலாக மானாவாரி பயிர்களான மணிலா, உளுந்து, துவரை, காராமணி போன்றவற்றை சாகுபடி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். விதைகளை விதைப்பதற்கு முன்பு ஒரு கிலோ விதைக்கு டிரைக்கோ டெர்மா 4 கிராம் அல்லது சூடோமோனாஸ் 10 கிராம் என்ற அளவில் உயிர் பூஞ்சான விதை நேர்த்தி செய்து விதைப்பு மேற்கொள்ள வேண்டும்.

இதனால் மணிலா மற்றும் பயறு வகைப் பயிர்களில் தோன்றும் வேர் அழுகல் நோய் மற்றும் இலைப்புள்ளி நோய்கள் ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தப்பட்டு மகசூல் அதிகரிக்கும்.மேலும் நேரடி உரங்களான யூரியா, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் ஆகிய உரங்களை தேர்வு செய்து இடுவதால் செலவும் குறையும், எளிதாக எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

உரங்களை தனியார் உரக் கடைகள் மற்றும் கூட்டுறவுக் கடைகளில் வாங்கும்போது விவசாயிகள் அதற்கு உண்டான ரசீதுகளை கேட்டுப் பெறவும். உரங்களின் விலைகள் அந்தந்த மூட்டைகளில் அச்சிடப்பட்டு இருக்கும். அரசு நிர்ணயித்த விலைக்கு அதிகமான விலையில் விற்பனை செய்யும் வியாபாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகள் தங்களுக்கு ஏற்படும் விவசாயம் மற்றும் உரம் சம்பந்தமான சந்தேகங்களுக்கு வேளாண்மை அலுவலகத்தை அணுகலாம் என கே.வி. குப்பம் வேளாண்மை உதவி இயக்குநர் என். சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

**கால்நடை தீவனமாகும் கரும்புத் தோகை**

பா.சுஜித்குமார்

First Published : 16 Jun 2011 10:36:26 AM IST

திருவண்ணாமலை: கரும்புத் தோகையை ஊட்டமேற்றி பதப்படுத்தி கால்நடைத் தீவனமாக மாற்றும் வழிமுறையை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் அறிமுகம் செய்துள்ளது.

விவசாயத்தில் கால்நடைகளுக்கும் முக்கிய பங்குள்ளது. உலகிலேயே அதிகளவில் கால்நடைகள் கொண்ட நாடாக இந்தியா விளங்குகிறது. கால்நடை பண்ணையின் உற்பத்தியும், சுகாதாரமும், அக்கால்நடைகளுக்கு தரப்படும் தீவனத்தை பொறுத்து அமைகிறது.

சரியான மேய்ச்சல் நிலங்கள் இல்லாமையால் கால்நடைகளில் புரதம் மற்றும் எரிசக்தி பற்றாக்குறை காணப்படுகிறது. இந்தியாவில் விவசாயம் பருவமழையை சார்ந்துள்ளதால், மழைக்காலங்களில் அதிக பசுந்தீவனம் கிடைக்கிறது. இந்த பசுந்தீவனத்தை சில விவசாயிகள் மட்டுமே காயவைத்து பற்றாக்குறை காலத்தில் பயன்படுத்துகின்றனர். இந்த வகையில் கரும்புத் தோகையையும் பதப்படுத்தி தீவனமாக மாற்றலாம்.

கரும்பு பருவப்பயிராகும். கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் கரும்பு வெட்டப்படுகிறது. ஒரு டன் கரும்புக்கு 150 கிலோ தோகை கிடைக்கும். இதை பதப்படுத்திய தீவனமாக மாற்றுவதன் மூலம் ஆண்டுதோறும் பயன்படுத்தலாம்.

பசுந்தீவனத்தை அதன் ஈரப்பதமும் பசுந்தன்மையும் மாறாமல் காற்று இல்லா சூழலில் பதப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் தீவனம் பதப்படுத்திய தீவனம் ஆகும். இதனால் கரும்புத் தோகை மேலும் ஊட்டச்சத்து பெறுகிறது.

**தேவையான பொருள்கள்:**

ஒவ்வொரு 1000 கிலோ கரும்புத் தோகைக்கும் கரும்புக் கழிவுப் பாகு அல்லது வெல்லம் 20 கிலோ, சமையல் உப்பு 10 கிலோ, யூரியா 10 கிலோ தேவைப்படுகிறது.

குழியை தயார்படுத்துதல்:

15 சென்ட் நிலத்தில் சுமார் 1000 கிலோ தோகை கிடைக்கும். இத்தோகைக்கு 7ல7ல4 அடி அளவில் குழி வெட்ட வேண்டும். 7000 கிலோ தோகைக்கு 12ல12ல8 அடி உள்ள குழி போதும். குழியின் உள்பகுதியை களிமண் கொண்டு மெழுக வேண்டும்.

**பதப்படுத்தும் முறை:**

கரும்புத் தோகையை புல்வெட்டும் கருவியைக் கொண்டு அரை அங்குலம் உள்ள சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ள வேண்டும். அவற்றை தீவனக்குழியில் காற்று புகா வண்ணம் நிரப்பவேண்டும். சிறு துண்டுகளாக வெட்ட முடியாவிட்டால் அப்படியே போட்டும் குழியை நிரப்பலாம். தோகைகளை அதிக அளவில் நிரப்பி நன்கு மிதிக்க வேண்டும்.

**குழியை நிரப்புதல்:**

துண்டாக வெட்டப்பட்ட தோகையை அரை அடி அளவு அடுக்கி உப்பு, யூரியா, வெல்லப் பாகு கரைசலை தெளிக்க வேண்டும். தேவையான யூரியாவை நீரில் கரைத்து உப்பையும் தூவ வேண்டும். குழியின் விளிம்பு வரை நிரப்பிய பின் கூம்பு வடிவாக அமைத்து நன்றாக அழுத்தி பாலிதீன் விரிப்பு கொண்டு காற்று, மழைநீர் புகாமல் மூட வேண்டும். தேவையான மண்ணும் கொட்ட வேண்டும். காற்றும், மழைநீரும் புகாமல் காக்கப்படும் தீவனம் பல ஆண்டுகள் கெடாமல் இருக்கும்.

**குழியை திறத்தல்:**

குழியை திறக்கும் போது மேலே உள்ள மண்ணை நீக்கவேண்டும். பின் பாலிதீன் கவரை அகற்றி தேவையான தீவனத்தை எடுத்து பின்பு மூடிவிட வேண்டும்.

**தோகைத் தீவனத்தின் நன்மைகள்:**

வறட்சி காலங்களில் இத்தீவனத்தை பயன்படுத்தலாம். சுவையேற்றப்பட்டுள்ளதால் கால்நடைகள் விரும்பி உண்ணும். உட்கொள்ளும் திறன் அதிகரிக்கப்படுகிறது. எரிசக்தி மற்றும் புரதச்சத்தின் அளவு அதிகரிக்கிறது.

பதப்படுத்தப்படாத தோகையில் 1.86 சதவீத செரிமான புரதம், 44.73 சதவீத மொத்த செரிமான சத்துக்களும் உள்ளன. பதப்படுத்தப்பட்ட தோகையில் இவை முறையே 5.81 மற்றும் 47.53 சதவீதம் என அதிகரிக்கிறது. ஒரு ஏக்கரில் கிடைக்கப்பெறும் கரும்புத் தோகையை தினம் 15 கிலோ தீவனமாக அளிப்பதின் மூலம் ஒரு பசுமாட்டை ஆண்டு முழுவதும் பராமரிக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு, "விரிவாக்கக் கல்வி இயக்குநர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், மாதவரம் பால்பண்ணை வளாகம், சென்னை-51. தொலைபேசி-044-25551579 அல்லது பேராசிரியர் மற்றும் தலைவர் கால்நடை ஊட்டச்சத்தியல் துறை, சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரி, சென்னை-7, தொலைபேசி-044-2538150' என்ற முகவரிகளில் அணுகலாம்.

**கோடைக்கு ஏற்ற துவரை சாகுபடி**

First Published : 16 Jun 2011 10:37:15 AM IST

வேலூர்: கோடைப் பருவத்தில் துவரை சாகுபடி செய்து அதிக பலன் பெறலாம் என வேளாண் துறையினர் யோசனை தெரிவித்துள்ளனர்.

வேலூர் மாவட்டம், நாட்டறம்பள்ளி வட்டாரத்தில் சுமார் 1,500 ஹெக்டேர் அளவில் துவரை சாகுபடி செய்யப்படுகிறது.

இப்பயிர் அதிக அளவில் மானாவாரி பயிராக பயிரிடப்படுவதால், இவ்வட்டாரத்தில் கோடை மழையை பயன்படுத்தி அதிக மகசூல் பெற்று வருகின்றனர்.

ஏற்ற ரகம்: எல்ஆர்ஜி41, விபிஎன்2, விபிஎன்3, பிஆர்ஜி1 ஆகிய ரகங்கள் கோடை சாகுபடிக்கு ஏற்றவை. இந்த ரகங்களில் ஏதாவது ஒன்றை ஹெக்டேருக்கு 10 கிலோ அளவில் தனிப் பயிராக பயிரிடலாம்.

**விதைக்கும் முறை:** விதைக்கும் முன் 1 கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டசிம் பூஞ்சான மருந்தை கலந்து விதைத்தல் வேண்டும். இதனால் வேர் அழுகல் நோய் மற்றும் வாடல் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

பூஞ்சானகொல்லி விதை நேர்த்தி செய்த விதையை 24 மணி நேரம் கழித்து உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் 3 பாக்கெட், பாஸ்போபேக்டீரியா 3 பாக்கெட் ஆகியவற்றுடன் 3 டம்ளர் ஆறிய கஞ்சியை சேர்த்து நன்கு கலந்து 15 நிமிடங்கல் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும்.

**உர மேலாண்மை:** கோடை உழுவு செய்த நிலத்தில் ஒரு ஹெக்டேருக்கு தொழு உரம் 12.5 டன், 25 கிலோ மண்புழு உரம் ஆகியவற்றை கடைசி உழவின்போது இட வேண்டும். ரசாயன உரங்களான ஜிப்சம் 55 கிலோ, டிஏபி 54.5 கிலோ, யூரியா 5.5 கிலோ, பொட்டாஷ் 21 கிலோ ஆகியவை அடி உரமாக இட வேண்டும்.

நுண்ணூட்டச் சத்தான ஜிங்க் சல்பேட் 12.5 கிலோ உரத்தை 50 கிலோ மணலுடன் கலந்து விதைப்பதற்கு முன் சீராகத் தூவ வேண்டும். இத்துடன் 5 கிலோ நுண்ணூட்டக் கலவையை 20 கிலோ மணலுடன் கலந்து இடவேண்டும்.

**பயிர் இடைவெளி:** விதையை வரிசைக்கு வரிசை 180 செ.மீ. அளவும், விதைக்கு விதை 30 செ.மீ. அளவும் இடைவெளி விட்டு நடவும். விதைத்த 3-ம் நாள் 2 லிட்டர் களைகொல்லியான பெண்டிமெத்திலின்-ஐ 50 கிலோ மணலுடன் கலந்து மண்ணில் சீராகத் தூவ வேண்டும்.

பின்னர் 25 முதல் 30-வது நாளில் களை எடுக்க வேண்டும். களை எடுக்கும்போது ஒரு அடி இடைவெளியில் ஒரு செடி இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மகசூல் அதிகரிக்க பூக்கும் தருவாயில் 2 சதவீத டிஏபி கரைசலை 15 நாள் இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும்.

இந்த வழிமுறைகளை கடைபிடித்தால் ஹெக்டேருக்கு 1500 முதல் 2000 கிலோ வரை மகசூல் பெறமுடியும் என நாட்டறம்பள்ளி வேளாண்மை உதவி இயக்குநர் த.கணேசன் தெரிவித்துள்ளார்.

தினமலர்

# உணவு பொருள் பணவீக்கம் 8.96 சதவீதமாக குறைந்தது

ஜூன் 17,2011,00:06



புதுடில்லி: நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், ஜூன் 4ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 8.96 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 9.01 சதவீதம் என்ற அளவில் உயர்ந்து காணப்பட்டது.கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், பருப்பு வகைகள் விலை, சென்ற ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடும் போது, 10 சதவீதமும், காய்கறிகளின் விலை, 1.39 சதவீதமும் குறைந்திருந்தது.இருப்பினும், பழங்கள் விலை, 30 சதவீதம் உயர்ந்திருந்தது. மேலும், பால் (10.59 சதவீதம்), முட்டை இறைச்சி மீன் (7.31 சதவீதம்), வெங்காயம் (12.17 சதவீதம்), உருளைக்கிழங்கு (1.14 சதவீதம்), குறிப்பிட்ட சில தானியங்கள் (5.25சதவீதம்) போன்றவற்றின் விலையும் அதிகரித்திருந்தது.ஒட்டுமொத்தமாக, மதிப்பீட்டு வாரத்தில், முக்கிய பொருள்களின் பணவீக்கம், 11.52 சதவீதத்திலிருந்து, 12.86 சதவீதமாக அதிகரித்திருந்தது. உணவு சாராத பொருள்களின் கீழ், நூலிழை விலை 53.54 சதவீதம் அதிகரித்திருந்தது. தாதுப் பொருள்கள் (25.90 சதவீதம்), எரிபொருள் மற்றும் மின்சாரம் (12.84 சதவீதம்) பெட்ரோல் (33.23சதவீதம்) ஆகியவற்றின் விலையும் அதிகரித்திருந்தது.

## முக்கிய பொருள்கள் இறக்குமதி 9.3 சதவீதம் அதிகரிப்பு

ஜூன் 17,2011,00:07



புதுடில்லி: சென்ற நிதியாண்டில் (2010-11), பிப்ரவரி வரையிலான 11 மாத காலத்தில் நாட்டின் முக்கிய பொருள்கள் இறக்குமதி 9.3 சதவீதம் அதிகரித்து, 65ஆயிரத்து 596 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, முந்தைய ஆண்டின் இதே காலத்தில் 60ஆயிரத்து 11 கோடி ரூபாயாக இருந்தது.சமையல் எண்ணெய், பழங்கள், காய்கறிகள், கொட்டை வகைகள், ரப்பர் , வாகனம், பால் மற்றும் பால் பொருள்கள், மதுவகைகள், பளிங்கு மற்றும் கிரானைட் கற்கள், வாகனம் மற்றும் உணவு தானியங்கள் உள்ளிட்டவை முக்கிய பொருட்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. மதிப்பீட்டு காலத்தில், இவ்வகைப் பொருள்களின் இறக்குமதி அதிகரித்துள்ளது.சென்ற பிப்ரவரி மாதம் வரையிலான 11 மாத காலத்தில், சமையல் எண்ணெய் இறக்குமதி, 13.7 சதவீதம் உயர்ந்து 27ஆயிரத்து 314 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இதே காலத்தில், கச்ச எண்ணெய் இறக்குமதி, 16.6 சதவீதம் உயர்ந்துள்ளது. அதே சமயம், சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய் இறக்குமதி 1.5 சதவீதம் குறைந்துள்ளது.மதிப்பீட்டு காலத்தில், உணவு தானியங்கள் இறக்குமதி 250 கோடியே 17 லட்ச ரூபாயாக அதிகரித்துள்ளது. முந்தைய ஆண்டு இதே காலத்தில் இது 91 கோடியே 80 லட்சம் ரூபாயாக இருந்தது.அதுபோல், பால் மற்றும் பால் பொருட்கள் இறக்குமதி 286 கோடியே 24 லட்சம் ரூபாயில் இருந்து, 753 கோடியே 42 லட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது.வாகனத் துறை சார்ந்த இறக்குமதி, ஆயிரத்து 35 கோடியே 4லட்சம் ரூபாயில் இருந்து 2 ஆயிரத்து 86 கோடியே 75 லட்சம் ரூபாயாக அதிகரித்துள்ளது. மதுபானங்கள் இறக்குமதி 47.1 சதவீதமும், ரப்பர் இறக்குமதி 95.9 சதவீதமும் அதிகரித்துள்ளன.

**மல்லிகை, வெண்டை பயிர்களில் செஞ்சிலந்தி தாக்குதலை கட்டுப்படுத்தும் விதிமுறை**

பதிவு செய்த நாள் : ஜூன் 17,2011,03:05 IST

செய்துங்கநல்லூர் : மல்லிகை, வெண்டை பயிர்களில் செஞ்சிலந்தி தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண் விஞ்ஞானி யோசனை கூறியுள்ளார்.தற்போது நிலவும் வறண்ட இக்கோடையில் உங்கள் மல்லிகை, வெண்டைப் பயிர்களில் இலைகள் மஞ்சள் நிறமாக மாறுவதைக் கவனித்திருப்பீர்கள். வெண்டையில் காய்களும் மஞ்சள் நிறமாகி வெளுத்துப் போய்விடும். இந்நிறமாற்றம் செஞ்சிலந்தி தாக்குதலால் ஏற்படுகின்றது. செஞ்சிலந்தி தாக்குதலின் அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாடு முறைகள் குறித்து நாம் தெரிந்து கொள்வது அவசியம். செஞ்சிலந்தி தாக்குதல் அறிகுறிகள் : பாதிப்பு முதலில் முதிர்ந்த இலைகளில் தோ ன்றி இளம் இலைகளுக்கு பரவும். இலைகளின் மேற்புறத்தில் மஞ்சள் நிறப் புள்ளிகள் காணப்படும். பாதிக்கப்பட்ட மல்லிகை இலைகள் மற்றும் வெண்டை காய்களின் இலைகள் ஆகியவற்றை உற்று நோக்கினால் மெல்லிய நூலாம்படையும், அதனுள் சிவப்பு சிற சிறிய பூச்சிகள் மெதுவாக நகர்வதையும் காணமுடியும். உருப்பெருக்கி கொண்டு பார்த்தால் அப்பூச்சிகள் எட்டுக்கால்கள் கொண்டனவாக இருப்பதினை காணலாம். இப்பூச்சிகள் செவ்வுண்ணி என்றும் அழைக்கப்படும். தாக்குதல் தீவிரப்பட்டால் இலைகள் முற்றிலும் வெளுத்து காய்ந்து கீழே உதிர்ந்து விடும். வறண்ட வெப்பமான சூழ்நிலையில் செஞ்சிலந்தி தாக்குதல் விரைந்து பரவும். நன்கு மழை பெய்தால் தாக்குதல் குறையும். இதனை கட்டுப்படுத்த மல்லிகை, வெண்டைப் பயிர்களில் ஒரு லிட்டர் தண்ணீருக்கு மூன்று கிராம் வீதம் நனையும் கந்தகம் மருந்தினைக் கரைத்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். தேவைப்பட்டால் பதினைந்து நாட்கள் கழித்து மீண்டும் தெளிக்க வேண்டும். பயிரின் வளர்ச்சியினைப் பொறுத்து ஏக்கருக்கு 200 முதல் 300 லிட்டர் வரை மருந்துக் கரைசல் தேவைப்படலாம். இலையின் அடிப்புறமும்படும் படித் தெளிக்க வேண்டும். முக்கிய குறிப்பு : மருந்துக் கரைசலைத் தெளிக்கும் போது பயிரில் நன்கு படிவதற்காக வேளாண்மைக்கான திரவ சோப்புகளில் ஒன்றினை (சாண்டோவிட், இன்ட்ரான்) ஒரு லிட்டர் மருந்துக் கரைசலுக்கு கால் மில்லி வீதம் சேர்த்துக் கலக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு திருவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ஜெயராஜன் நெல்சன் தெரிவிக்கிறார்.

**உளுந்துபயிரில் மஞ்சள்தேமல் நோயை கட்டுப்படுத்தும் வழிமுறை**

பதிவு செய்த நாள் : ஜூன் 17,2011,03:05 IST

செய்துங்கநல்லூர் : உளுந்து பயிரைத் தாக்கும் மஞ்சள் தேமல் நோயை கட்டுப்படுத்த வேளாண் விஞ்ஞானி ஆலோசனை கூறியுள்ளார். கோடை உளுந்துப் பயிரில் இளம் இலைகளில் மஞ்சள் நிற தேமல் போன்ற அறிகுறி காணப்படும். மஞ்சள் தேமல் நோய் தாக்குதலுக்குட்பட்ட பயிரின்

இலைப்பரப்பில் முதலில் சிறிய புள்ளிகள் தோன்றி படிப்படியாக மஞ்சள் நிறப்படலங்களாக மாறிவிடும். உளுந்து சாகுபடியில் மஞ்சள் தேமல் நோய் மிக முக்கியமானதாகும். இந்த நோயானது உளுந்தை மட்டுமின்றி பச்சைப்பயறு, துவரை மற்றும் சோயா, மொச்சை போன்றவற்றை தாக்கி மகசூல் இழப்பை ஏற்படுத்தும். இந்த நோயின் அறிகுறிகளான மஞ்சள் நிற தேமல் படலங்கள் முதன் முதலில் இளம் இலைகளில் தான் காணப்படும். இந்த நோயின் பாதிப்புக்குட்பட்ட பயிர் முதிர்ச்சியடைய காலதாமதமாகும். மேலும் குறைந்த அளவே பூக்கள் மற்றும் காய்களைக் கொண்டிருக்கும். காய்கள் சிறிய அளவிலும் உருமாறியும் காணப்படும். மஞ்சள் தேமல் நோயானது செடியின் குறைந்த வயதில் (பூக்கும் முன்பு) தாக்கும்பொழுது பயிரானது காய் பிடிக்காமலேயே இறந்துவிடும் வாய்ப்புள்ளது. எனவே பாதிக்கப்பட்ட செடிகளை உடனே பிடுங்கி அழிப்பதன் மூலம் இந்நோய் பரவாமல் தவிர்க்க முடியும். இந்த கொடிய நச்சுயிரி நோய் வெள்ளை ஈ மூலம் பரவுகின்றது. வெள்ளை ஈக்கள் நடமாட்டத்தினை கண்காணிக்க நெடுஞ்சாலை மஞ்சள் நிறம் பூசப்பட்ட டப்பாக்களில் விளக்கெண்ணெய் தடவி ஏக்கருக்கு ஐந்து என்ற அளவில் பயிர்மட்டத்தில் குச்சிகளில் கவிழ்த்து வைக்க வேண்டும். ஏக்கருக்கு 200 மில்லி டைமீத்தோயேட் அல்லது மானோகுரோட்டபாஸ் என்ற பூச்சிக்கொல்லியினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்த முடியும். மருந்து கரைசல் பயிரின் பாகங்களில் நன்கு பரவிப் படிவதற்காக வேளாண்மைக்கான திரவ சோப்புகளான சாண்டோவிட், இன்ட்ரான் போன்றவற்றுள் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் மருந்து கரைசலுக்கு கால் மில்லி வீதம் சேர்த்துக் கலக்கிக் கொள்ள வேண்டும். 10-15 நாட்கள் கழித்து மீண்டும் மருந்து தெளிக்க வேண்டும். கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க பயிரின் வளர்ச்சியினைப் பொறுத்து ஏக்கருக்கு இருநூறு லிட்டர் வரை மருந்துக் கரைசல் தேவைப்படும். இவ்வாறு திருவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ஜெயராஜன் நெல்சன் தெரிவித்துள்ளார்.

**பருவமழையால் கொப்பரை உற்பத்தி முடக்கம் :காங்கயத்திற்கு செல்கிறது தேங்காய்**

பதிவு செய்த நாள் : ஜூன் 16,2011,23:23 IST

பொள்ளாச்சி : கோவை, திருப்பூர் மாவட்டத்தில் தென்மேற்கு பருவழை தீவிரமடைந்து வருவதால் கொப்பரை உற்பத்தி பணிகள் முழுவதும் முடங்கியுள்ளன. இதனால், தேங்காய் காங்கயத்திற்கு கொண்டு செல்லப்பட்டு கொப்பரை உற்பத்தி செய்யப்படுகிறது.கோவை, திருப்பூர் மாவட்டத்தின் பிரதான விவசாயமாக தென்னை விவசாயம் உள்ளது. கடந்த பிப்ரவரியில் இருந்து தேங்காய் சீசன் துவங்கியுள்ளதால் தேங்காய் வரத்து அதிகமாக உள்ளது. இந்நிலையில் கடந்த இரண்டு வாரமாக தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்வதால் கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

கொப்பரை உற்பத்தியாளர்கள், உலர்களங்களில் தேங்காயை உடைத்து உலர வைத்ததும் மழை வருவதால் உடனடியாக பாலிதீன் தார்பாலின் போட்டு மூடுகின்றனர். மழை நின்றபின் மீண்டும் தேங்காயை உலர வைக்கின்றனர். இதனால் தேங்காய் தரம் குறைந்து விடுகிறது. தொட்டியில் இருந்து தேங்காய் பருப்பு பிரித்து எடுக்கப்பட்டு உலர வைக்கும் போது ஈரப்பதமான காற்று வீசுவதால் கொப்பரையின் தரம் பாதிக்கப்படுகிறது. இதனால் கொப்பரைக்கு குறைந்த விலை நிர்ணயம் செய்கின்றனர்.

பொள்ளாச்சி, உடுமலை தாலுகாவுக்கு உட்பட்ட பகுதிகளில் தென்மேற்கு பருவமழை சீசனில் கொப்பரை உற்பத்தி செய்வது குதிரைக்கொம்பான விஷயம் என்பதால், கொப்பரை உற்பத்தியாளர்கள் தேங்காயை காங்கயம் கொண்டு சென்று கொப்பரை தயாரிக்கின்றனர். இதனால், கொப்பரை, தேங்காய் போன்றவற்றுக்கு விலை நிர்ணயம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.கொப்பரை உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் கூறியதாவது:கோவை, திருப்பூர் மாவட்டத்தில் நடப்பு மாதத்தில் தினமும் 400 முதல் 500 லோடு தேங்காய் (15 ஆயிரம் தேங்காய் வீதம்) உற்பத்தியாகிறது. இரு மாவட்டத்திலும் உள்ள 1,500க்கும் மேற்பட்ட கொப்பரை உற்பத்தி களங்களில் தேங்காய் உடைக்கப்பட்டு கொப்பரை உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மூலம் தினமும் 60 முதல் 70 லோடு கொப்பரை (12 டன் வீதம்) உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

தென்மேற்கு பருவமழை துவங்கி விட்டால் பொள்ளாச்சி, உடுமலை பகுதியில் கொப்பரை உற்பத்தி பணிகள் ஸ்தம்பித்து விடுகிறது. மழையாலும், ஈரப்பதமான காற்று வீசுவதால் கொப்பரையின் தரம் பாதிக்கப்படுகிறது. இதனால் கொப்பரை உற்பத்தியை நிறுத்தியுள்ளோம். இன்னும் மூன்று மாதங்கள் வரையிலும் இதே நிலை நீடிக்கும். அதனால், உற்பத்தியாகும் தேங்காயை காங்கயம், வெள்ளகோவில், ஊத்துக்குளி, முத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள உலர்களங்களுக்கு கொண்டு சென்று கொப்பரை உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கு 2,500க்கும் மேற்பட்ட உலர் களங்கள் உள்ளன. அங்குள்ள வியாபாரிகளுக்கு தேங்காயை விற்பனை செய்து விடுகிறோம். அல்லது, அங்குள்ள உலர்களங்களை இரண்டு மாதங்களுக்கு வாடகைக்கு பிடித்து கொப்பரை உற்பத்தி செய்கிறோம்.

பொள்ளாச்சி, உடுமலையில் கொப்பரை உற்பத்தி தடைபட்டுள்ளதால் மார்க்கெட்டில் கொப்பரைக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஆனால் வெளியிடங்களுக்கு தேங்காயை கொண்டு சென்று கொப்பரை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளதால் போக்குவரத்து செலவு அதிகரிக்கிறது. இதனால், தேங்காய் விலையை உயர்த்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு, கொப்பரை உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். விவசாயிகளுக்கு நல்ல காலம்: கொப்பரை உற்பத்தியாளர்கள் கூறுகையில், "தமிழகத்தில் கடந்தாண்டுடன் ஒப்பிடும் போது தேங்காய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், கொப்பரைக்கும் உயர்ந்தபட்ச விலை கொடுக்கப்படுகிறது.

இந்தாண்டு தேங்காய் சீசனிலும் தேங்காய் இருப்பு வைக்கப்படவில்லை. நேற்றைய நிலவரப்படி கொப்பரை கிலோவுக்கு 65 -67 ரூபாயும், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,460 ரூபாயும் விலை கொடுக்கப்பட்டது. மழை சீசன் துவங்கியுள்ளதால் தேங்காய் பறிப்பு, கொப்பரை உற்பத்தி தடைபட்டுள்ளதால் விலை உயரத்துவங்கியுள்ளது. வரும் மாதங்களில் தேங்காய் வரத்து குறையும் என்பதால் கொப்பரை விலை உயர்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன' என்றனர்.

**ஒரே நாளில் 63 டன் காய்கறி விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜூன் 16,2011,23:36 IST

திருப்பூர் : இரண்டு மாத கோடை விடுமுறைக்குப் பின், பள்ளி, கல்லூரிகளில் உள்ள விடுதிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. பள்ளி நிர்வாகங்கள் தேவையான காய்கறிகளை வாங்க, உழவர் சந்தையில் போட்டி போடுவதால், நேற்று ஒரே நாளில் காய்கறிவிற்பனை 63 டன்னை தொட்டது.திருப்பூர், பல்லடம் ரோட்டில் தெற்கு உழவர் சந்தை உள்ளது. தோட்டங்களில் விளைந்த காய்கறிகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் விவாசாயிகள் இங்கு விற்பனை செய்கின்றனர். தக்காளிகள், கூடை கணக்கிலும், வெங்காயம், உருளைக்கிழக்கு, கேரட், பீன்ஸ், தேங்காய் ஆகியவை மூட்டை கணக்கிலும் விற்கப்படுகின்றன. கோடை விடுமுறைக்கு பின், பள்ளிகள் நேற்று முன்தினம் திறக்கப்பட்டன.

கடந்த இரண்டு மாதமாக மூடப்பட்டிருந்த பள்ளி, கல்லூரிகளின் விடுதிகளும் திறக்கப்பட்டன. ஏற்கனவே விடுதியில் தங்கி பயின்ற மாணவர்கள், புதிதாக சேர்ந்துள்ள மாணவர்களை கணக்கில் கொண்டு, விடுதிக்கு தேவையான காய்கறிகளை வாங்கத் துவங்கியுள்ளனர். ஒரு மாதமாக இல்லாத வகையில், கடந்த இரண்டு நாட்களாக தினமும் 63 டன் காய்கறிகள் விற்கப்படுகின்றன. தெற்கு உழவர் சந்தை அலுவலர் ராமலிங்கத்திடம் கேட்ட போது,""வழக்கமாக 56 முதல் 60 டன் காய்கறி விற்பனையாகும். கடந்த இரண்டு நாட்களாக, பள்ளி, கல்லூரி விடுதிகளுக்கு காய்கறி, பழங்கள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர். 58 முதல் 63 டன் காய்கறிகள் விற்பனையாகியுள்ளன. விற்பனை அதிகரிப்பது வியாபாரிகள் இடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது,'' என்றார்.

**கொப்பரை உற்பத்திக்கு காங்கயம் செல்லும் தேங்காய்**

பதிவு செய்த நாள் : ஜூன் 16,2011,23:36 IST

கோவை, திருப்பூர் மாவட்டத்தில் தென்மேற்கு பருவழை தீவிரமடைந்து வருவதால், கொப்பரை உற்பத்தி பணி முடங்கியுள்ளது. இதனால், காங்கயத்துக்கு கொண்டு செல்லப்பட்டு கொப்பரை உற்பத்தி செய்யப்படுகிறது. கோவை, திருப்பூர் மாவட்டத்தில் பிரதானமாக தென்னை விவசாயம் உள்ளது. கடந்த பிப்.,யில் இருந்து தேங்காய் சீசன் துவங்கியுள்ளதால், தேங்காய் வரத்து அதிகமாக உள்ளது. இந்நிலையில், கடந்த இரண்டு வாரமாக தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்வதால் கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. கொப்பரை உற்பத்தியாளர்கள், உலர்களங்களில் தேங்காயை உடைத்து உலர வைத்ததும், மழை வருவதால் உடனடியாக பாலிதீன் தார்பாலின் போட்டு மூடுகின்றனர்.

மழை நின்றபின், மீண்டும் தேங்காயை உலர வைக்கின்றனர். இதனால், தேங்காய் தரம் குறைந்து விடுகிறது. தொட்டியில் இருந்து தேங்காய் பருப்பு பிரித்து எடுக்கப்பட்டு உலர வைக்கும்போது ஈரப்பதமான காற்று வீசுவதால் கொப்பரையின் தரம் பாதிக்கப்படுகிறது. இதனால், கொப்பரைக்கு குறைந்த விலை நிர்ணயம் செய்கின்றனர்.உடுமலை தாலுகாவுக்கு உட்பட்ட பகுதிகளில் தென்மேற்கு பருவமழை சீசனில் கொப்பரை உற்பத்தி செய்வது குதிரைக்கொம்பான விஷயம் என்பதால், கொப்பரை உற்பத்தியாளர் கள் தேங்காயை காங்கயம் எடுத்துச் சென்று கொப்பரை தயாரிக்கின்றனர். இதனால், கொப்பரை, தேங்காய் போன்றவற்றுக்கு விலை நிர்ணயம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கொப்பரை உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள் கூறியதாவது: கோவை, திருப்பூர் மாவட்டத்தில் நடப்பு மாதத்தில் தினமும் 400 முதல் 500 லோடு தேங்காய் (15 ஆயிரம் தேங்காய் வீதம்) உற்பத்தியாகிறது. இரு மாவட்டத்திலும் உள்ள 1,500க்கும் மேற்பட்ட கொப்பரை உற்பத்தி களங்களில் தேங்காய் உடைக்கப்பட்டு, கொப்பரை உற்பத்தி செய்யப்படுகிறது.

இதன் மூலம் தினமும் 60 முதல் 70 லோடு கொப்பரை (12 டன் வீதம்) உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. தென்மேற்கு பருவமழை துவங்கி விட்டால், உடுமலை பகுதியில் கொப்பரை உற்பத்தி பணி ஸ்தம்பித்து விடுகிறது. மழையாலும், ஈரப்பதமான காற்று வீசுவதால் கொப்பரை தரம் பாதிக்கப்படுகிறது. இதனால், கொப்பரை உற்பத்தியை நிறுத்தியுள்ளோம். இன்னும் மூன்று மாதங்கள் வரை, இதே நிலை நீடிக்கும். அதனால், உற்பத்தியாகும் தேங்காயை, காங்கயம், வெள்ளகோவில், ஊத்துக்குளி, முத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள உலர்களங்களுக்கு கொண்டு சென்று கொப்பரை உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கு 2,500க்கும் மேற்பட்ட உலர் களங்கள் உள்ளன. அங்குள்ள வியாபாரிகளுக்கு தேங்காயை விற்பனை செய்து விடுகிறோம்.


அல்லது, அங்குள்ள உலர்களங்களை இரண்டு மாதங்களுக்கு வாடகைக்கு பிடித்து கொப்பரை உற்பத்தி செய்கிறோம்.பொள்ளாச்சி, உடுமலையில் கொப்பரை உற்பத்தி தடைபட்டுள்ளதால், மார்க்கெட்டில் கொப்பரைக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஆனால், வெளியிடங்களுக்கு தேங்காயை கொண்டு சென்று கொப்பரை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளதால், போக்குவரத்து செலவு அதிகரிக்கிறது. இதனால், தேங்காய் விலையை உயர்த்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது, என்றனர்.

**விவசாயிகளுக்கு மதிப்பாய்வு முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 16,2011,22:28 IST

சிவகங்கை : சிவகங்கை அருகே கோவானூரில் விவசாயிகளுக்கான மதிப்பாய்வு முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் முருகன் தலைமை வகித்தார். வட்டார சமூகவியலர் சுந்தரம், பொறியாளர் ஜெயராஜ், சாமிக்கண்ணு பங்கேற்றனர். ஊராட்சி துணை தலைவர் வைரம் நன்றி கூறினார்.

## *உணவு பொருள் பணவீக்கம் 8.96 சதவீதமாக குறைந்தது*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி*

*பருப்பு வகைகள் மற்றும் காய்கறி விலை குறைந்ததால், ஜூன் 4–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பொருள் பணவீக்கம் 8.96 சதவீதமாக குறைந்துள்ளது. முந்தைய வாரத்தில் இது, 9.01 சதவீதமாக இருந்தது.*

மொத்த விலை

உணவு பொருள் பணவீக்கம் மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. கடந்த 2010-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் முதல் வாரத்தில் இது 21 சதவீதமாக மிகவும் உயர்ந்து இருந்தது. தற்போது இது, 8.96 சதவீதமாக உள்ளது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில் ஓர்ஆண்டு கால அடிப்படையில் பருப்பு வகைகள் மற்றும் காய்கறிகள் விலை முறையே 10 சதவீதம் மற்றும் 1.39 சதவீதம் குறைந்துள்ளது. இருப்பினும் பழங்கள், பால் பொருள்கள் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பழங்கள் விலை 30 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், பால் விலை 10.59 சதவீதம் அதிகரித்துள்ளது.

முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 7.31 சதவீதம் உயர்ந்துள்ளது. வெங்காயம் விலை 12.17 சதவீதமும், உருளைக் கிழங்கு விலை 1.14 சதவீதமும் அதிகரித்துள்ளது. தானியங்கள் விலை 5.25 சதவீதம் உயர்ந்துள்ளது.

பொது பணவீக்கம்

பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 20 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள அத்தியாவசிய பொருள்கள் பணவீக்கம் 11.52 சதவீதத்திலிருந்து 12.86 சதவீதமாக உயர்ந்துள்ளது. எரிபொருள் பணவீக்கம் 12.46 சதவீதத்திலிருந்து 12.84 சதவீதமாக அதிகரித்துள்ளது.

சென்ற மே மாதத்தில் பொது பணவீக்கம் 9.06 சதவீதமாக மிகவும் உயர்ந்துள்ளது. பணவீக்கம் என்பது தேவைப்பாட்டை ஈடு கட்டும் வகையில் பொருள்கள் கிடைக்காததாலும், அதிக பணப்புழக்கத்தாலும் ஏற்படுகிறது. மக்களிடம் பணம் அதிகமாக புழங்கும்போது அது மித மிஞ்சிய அளவில் பொருள்களை வாங்கத் தூண்டும். எனவே பணப்புழக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி, வியாழக்கிழமை அன்று வெளியிட்ட கடன்கொள்கை ஆய்வு அறிக்கையில், முக்கிய கடன்களுக்கான வட்டிவிகிதங்களை 0.25 சதவீதம் உயர்த்தியுள்ளது.

## வேளாண் அமைச்சகத்தின் மறுமதிப்பீடு இந்தியாவின் கோதுமை உற்பத்தி 8.60 கோடி டன்னாக உயர வாய்ப்பு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

2010-11 வேளாண் பருவம் (ஜூலை-ஜூன்) நிறைவடைய உள்ள நிலையில் நாட்டின் கோதுமை உற்பத்தி 8.60 கோடி டன்னாக அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என மத்திய

விவசாய அமைச்சகத்தின் செயலாளர் பி.கே. பாசு தெரிவித்தார். இது, சென்ற பருவத்தில் 8.08 கோடி டன்னாக இருந்தது. ஆக, நடப்பு பருவத்தில் உற்பத்தி 6.4 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நான்கு ஆண்டுகளாக...

தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக கோதுமை உற்பத்தி அமோக வளர்ச்சி கண்டு வருகிறது. ஏப்ரல் 6–ந் தேதி வெளியிட்ட மதிப்பீட்டில் கோதுமை உற்பத்தி 8.43 கோடி டன்னாக உயரும் என வேளாண் அமைச்சகம் தெரிவித்திருந்தது. தற்போதைய மதிப்பீடு இதைக் காட்டிலும் 2 சதவீதம் அதிகமாகும். உற்பத்தி பெருகியுள்ள நிலையில் நான்கு ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் கோதுமை ஏற்றுமதி மீதான தடை நீக்கப்பட அதிக வாய்ப்புகள் உள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. சர்வதேச சந்தைகளில் கோதுமை விலை அதிகரித்துள்ளது. இதுவும் ஏற்றுமதிக்கு சாதகமான அம்சமாக உள்ளது. சிகாகோவில், கடந்த ஓராண்டில் கோதுமை விலை 64 சதவீதம் உயர்ந்துள்ளது. இதனால் பிப்ரவரி மாதத்தில் உலகம் முழுவதுமாகவே விலை கடுமையாக அதிகரித்திருந்தது.

உலக அளவில் கோதுமை உற்பத்தி சரிவடைய உள்ளதாக அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது. ஜூன் 9–ந் தேதி இத்துறை உலகின் கோதுமை விளைச்சல் 66.43 கோடி டன்னாக இருக்கும் என மறுமதிப்பீடு செய்துள்ளது. இது மே மாத மதிப்பீடான 67 கோடி டன்னைக் காட்டிலும் குறைவாகும். இந்நிலையில் இந்தியா கோதுமை ஏற்றுமதிக்கு அனுமதி அளித்தால் சர்வதேச சந்தைகளில் சப்ளை அதிகரித்து விலை குறைய வாய்ப்புள்ளது என வெளிநாடுகளைச் சேர்ந்த வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கோதுமை கையிருப்பு

உலக அளவில் கோதுமை உற்பத்தி மற்றும் கையிருப்பு குறைய உள்ள நிலையில் இந்தியாவில் உற்பத்தி சிறப்பாக அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இது ஏற்றுமதிக்கான கதவுகளை அகல திறந்து வைத்துள்ளது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**மே மாதத்தில் 40 சதவீதம் அதிகரிப்பு தாவர எண்ணெய் இறக்குமதி 6.64 லட்சம் டன்னாக உயர்வு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

மே மாதத்தில் தாவர எண்ணெய் (சமையல் எண்ணெய் மற்றும் இதர பயன்பாட்டு எண்ணெய் வகைகள்) இறக்குமதி முந்தைய மாதத்துடன் ஒப்பிடும்போது 40 சதவீதம் உயர்ந்து 6.64 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது, முந்தைய ஏப்ரல் மாதத்தில் 4.75 லட்சம் டன்னாகவும், சென்ற ஆண்டு மே மாதத்தில் 6.50 லட்சம் டன்னாகவும் இருந்தது. அதனுடன் ஒப்பிடும்போது இறக்குமதி 19 சதவீதம் உயர்ந்துள்ளது. உள்நாட்டில் எண்ணெய் வித்துக்கள் சப்ளை குறைந்ததே இறக்குமதி குறைந்ததற்கான முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.

எண்ணெய் பருவம்

அதே சமயம் நடப்பு எண்ணெய் பருவத்தில் (நவம்பர்–அக்டோபர்) மே மாதம் வரையிலான ஏழு மாதங்களில் தாவர எண்ணெய் இறக்குமதி 12 சதவீதம் குறைந்து 42.67 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இது, முந்தைய ஆண்டு பருவத்தில் 48.49 லட்சம் டன்னாக இருந்தது. முதல் ஏழு மாதங்களில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி சிறப்பாக இருந்ததும், சப்ளை நன்கு இருந்ததுமே இதற்கு காரணம் என இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

நம் நாட்டில், 2010–11 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) 3.02 கோடி டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாகி உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஜூன் 1–ந் தேதி நிலவரப்படி நாட்டின் பல்வேறு துறைமுகங்களில் 4.70 லட்சம் டன் சமையல் எண்ணெய் வந்து சேர்ந்துள்ளது. மேலும் 8.75 லட்சம் டன் விரைவில் வந்திறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆக, மொத்த கையிருப்பு 13.45 டன்னாக உயர உள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 12.75 லட்சம் டன்னாக இருந்தது.

பாமாயில்

இந்தோனேஷியா, மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து பாமாயிலும், அர்ஜென்டினா, பிரேசில் ஆகிய நாடுகளிலிருந்து சோயா எண்ணெயும் வாங்கப்படுகிறது.

தினகரன்

**உணவு பணவீக்கம் 8.96% ஆக குறைவு**

பதிவு செய்த நாள் 6/17/2011 1:37:06 AM



புதுடெல்லி : தானியங்கள் மற்றும் காய்கறிகளின் விலை சரிவு காரணமாக ஜூன் 4ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 8.96 சதவீதமாக குறைந்துள்ளது.
உணவு பணவீக்கம் குறித்து அரசு நேற்று அறிக்கை வெளியிட்டது. அதில், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தானியங்கள் விலை 10 சதவீதமும், பெரும்பான்மையான காய்கறிகளின் விலை 1.39 சதவீதமும் குறைந்துள்ளது. இதனால் ஜூன் 4ம் தேதியிடன் முடிந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 8.96 சதவீதமாக குறைந்தது.

முந்தைய வாரத்தில் இருந்த 9.01 சதவீதத்தைவிட இது 0.5 சதவீதம் குறைவு. கடந்த 2010ன் ஜூன் முதல் வாரத்தில் இது 21 சதவீதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.
உணவு பணவீக்கம் கணிசமாக குறைந்திருந்த போதிலும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பழங்கள் விலை 30 சதவீதம், பால் 10.6 சதவீதம், மீன், கறி, முட்டை 7.31 சதவீதம், வெங்காயம் 12.17 சதவீதம், உருளை 1.14 சதவீதமும் அதிகரித்துள்ளன.

காய்கறி மற்றும் உணவு பண்டங்களின் தொடர் விலை உயர்வால் கடந்த 2010ம் ஆண்டில் பெரும்பான்மையான மாதங்களில் உணவு பணவீக்கம் இரட்டை இலக்கத்திலேயே இருந்தது. இந்த ஆண்டின் மார்ச் மாதத்துக்குப் பின் பணவீக்கம் மிதமாக குறைந்தது. 2 மாதங்களுக்குப்பின் மே கடைசி வாரத்தில் 9.01 சதவீதத்தை தொட்ட உணவு பணவீக்கம், தற்போது 8.96 சதவீதமாக குறைந்துள்ளது.

## டீத்தூள் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் 6/17/2011 1:34:42 AM



குன்னூர் : நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசு கூட்டுறவு ஏல மையத்தில் தேயிலைத்தூள் ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் 6 லட்சத்து 6 ஆயிரத்து 501 கிலோ விற்பனைக்கு வந்தது. இதில், இலை ரகம் 2 லட்சத்து 96 ஆயிரத்து 280 கிலோ, டஸ்ட் ரகம் 3 லட்சத்து 10 ஆயிரத்து 221 கிலோ. பாகிஸ்தான், ரஷ்யா உள்ளிட்ட வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிக அளவில் கொள்முதல் செய்தனர். உள்நாட்டு வர்த்தகர்களும் அதிக அளவில் கொள்முதல் செய்ததால், 93 சதவீத தேயிலைத்தூள் விற்பனையானது. அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.3 முதல் ரூ.5 வரை விலை உயர்ந்தது.

இலை ரகத்தில் சாதாரண வகை ரூ.45 முதல் ரூ.48 வரை, உயர் வகை ஸி55 முதல் ரூ.59 வரை, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.47 முதல் ரூ.51 வரை, உயர்வகை ரூ.56 முதல் ரூ.64 வரை விற்றது. டஸ்ட் ரகத்துக்கு அதிக விலை கிடைத்துள்ளது. கடந்த 2 வாரங்களாக அரசு கூட்டுறவு ஏலமையத்தில் தேயிலைத்தூளின் விற்பனை அதிகரித்து, விலையும் அதிகரித்து வருவதால், அரசு கூட்டுறவு ஏலமையத்தில் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.